சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.126/2024

20.02.2026

பி.வா.சா.1 திருமதி. உறாஜிராபீவி, த/பெ. சாகுல்உறமீது

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வாதியிடம் கடன் வாங்கியதும் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்தமு் உண்மை ஆனால் பணத்தை திரும்ப செலுத்திவிட்டேன் என்று கட்சி செய்கிறேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பணத்தை திரும்ப செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் பணத்தை திரும்ப செலுத்திவிட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும் தற்போது முதல்விசாரணையில் மட்டும் சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. அதே போல் வாதி கூடுதலாக வட்டி கேட்டார் என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பாத்திமாபீவி, முகம்மது உறனிபாபீவியிடம் பணத்தை செலுத்திவிட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் சொல்லாத சங்கதிகளை முதல்விசாரணையில் சொல்லியுள்ளதால் அது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனவே தாவாபடி வாதிக்கு தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் பணத்தை திரும்ப செலுத்தியிருந்தால் அடமானம் ரத்து செய்துக்கொடுத்திருப்பார் என்றாலும் பணத்தை திரும்ப செலுத்தாததால்தான் அடமானம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நம்பிக்கையின் பேரில் பணம் கொடுத்தேன். அடமானம் ரத்து செய்ததற்கான ரசீது என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அசலோ, வட்டியோ வாதிக்கு செலுத்தவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.